உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month, at one shilling a Quarter, payable in advance.

சஞ்சிகை யக.] ௲அ௱சக (௵). அனி. ௩. திகதி. வியாழக்கிழமை. Thursday, June 3, 1841. [No. 11.

வரலாறு.

உதயதாரகைப் பத்திரத்தில் கற்கை, சாத்திரம், பொதுவான
கல்வி, பயிர்ச்செய்கை, அரசாட்சி, மார்க்கம் முதலானவையைப்ப
ற்றியும், பிரதான புதினச் சங்கதிகளைப் பற்றியும் அச்சடிக்கப்படும்.
அது தமிழ்ப் பாஷையிலும், இடைக்கிடையே தமிழும் இங்கிலீசு
ங் கூடினதாயும், எட்டுப் புறமுள்ளதாக நான்காய் மடித்த தாள் அ
ளவில் ஒவ்வொரு மாதத்து முதலாம் மூன்றாம் வியாழக்கிழமைகளிற்
பிரசித்தம் பண்ணப்படும்.

இதின் விலை, பத்திரம் ஒன்றுக்கு, உ பென்சு அல்லது யசு. வெ
ள்ளைச் சல்லி, அல்லது மூன்று மாதத்திற்கும் முன்னறக் கொடுத்திரு
ந்தால் அப்பத்திரங்களின் விலை ஒரு சிலிங்கு.

இதற் பத்துப் பத்திரிகைக்குக் கையெழுத்து வைத்து மாதாந்த
ம் பணம் முன்னேறக் கொடுத்து வைத்து, மறு பெயருக்குச் செலவிட
க்கூடிய காரியகாரருக்கு இதின் விலை பத்திரம் ஒன்றுக்கு, கஉ.
பென்சு. அல்லது க. பணம். அல்லது மூன்றுமாதத்திற்கு முன்ன
றக்கொடுத்திருந்தால் விலை, கூ பென்சு.

இருபதுக்குக் கையெழுத்து வைத்து வருஷாந்தம் முன்னேற
க் கொடுத்துவைக்குங் காரியக்காரருக்கு இதன விலை பத்திரம் ஒ
ன்றுக்கு க. பென்சு, அல்லது அ. வெள்ளைச் சல்லி. மூன்றுமாத
த்திற்கு முன்னறக் கொடுத்திருந்தால், விலை ஆறு பென்சு.

☞ தவாற்செலவை விட.

காகிதம எழுதிக்கொள்பவர்கள் தாங்கள் அறிவிக்க வேண்டியவை
களை உதய தாரகைப் பத்திரத்தினது முகாமைக்காரருக்கு எழுதித்
தவாற்செலவுகொடுத்தனுப்பவும்.

TERMS.

The MORNING STAR will be devoted to Education, Science, and general Literature, and to the dissemination of articles on Agriculture, Government, and Religion, with a brief summary of important News.

The PRICE of the Paper is *two pence* a number, or *one shilling* a quarter, payable in advance.

To Agents who subscribe for *ten copies* and pay *in advance*, the price is *one and a half pence* a number, or *nine pence* a quarter.

To those who subscribe for *twenty copies* and pay *in advance*, the price is *one penny* a number, or *six pence* a quarter.

N. B. Postage extra.

Persons who wish to act as AGENTS, may apply to the Publisher, at the American Mission Press, Manepy, Jaffna.

CORRESPONDENTS may send their Communications *post paid* addressed to "The Editors of the Morning Star," Batticotta, Jaffna.

The following persons are authorized to act as *Agents* for the "Morning Star."

JAFFNAPATAM—Mr. C. F. Grenier; CHUNDICOLY—M. J. Povirrayasingem; POINT-PEDRO—A. Holmes; CALPENTYN—J. Woodhull; TRINCOMALIE—Rev. C. Hole; COLOMBO—Philip Canjimanadan; KANDY—Rev. W. Oakley; MADURA—Rev. F. D. Ward; DINDIGUL—Rev. J. J. Lawrence; TANJORE—Rev. T. Brotherton; MADRAS—P. R. Hunt, Esq.

பங்சுடுதீவு —பராமா நாகநாசபிள்ளை.

[BRIEF HISTORICAL VIEW OF INDIA.]

[Continued from page 78.]

இந்து தேசச் சரித்திரம்.—*Trees.*

ஆசினிப்பலா (Artocarpus incisa or the breadfruit tree) இந்து
தேசத்தின் சிலபகுதிகளில் உள்ளதாய் வாலிக்கென்னும் வைத்தியர்
எழுதிவைத்த விருக்கசாத்திரத்திற் காணப்படுகின்றது. (Dr. Wallick's botanical Catalogue; and Botanical Magazine tab. 2869, 2870, and 2871.) இதன உயரம் (சo) அடியும் அடிமரங் குறுக்கள
வில் இரண்டடிகனமுமுள்ளதாய் இருக்கின்றது. மரம் விசாலித்ததா
னதினால் அதிக நிழலைக்கொடுக்கின்றது. இலைகள் மேகவன்னப் பச்
சைநிறமுள்ளவைகளாயும் பிரகாசமுள்ளவைகளாயும் இருக்கின்றன.
அவைகள் மூன்றடிநீளமும் ஒன்றரையடி அகலமுமாய் இருக்கும். சி
லமரங்கள் யாதொரு கணுக்களில்லாமல் (உய) அடி உயரத்துக்கு வ
ளருகின்றனவென்றும் புகர்நிறமுள்ள பிரகாசம் போன்றனவென்று
ம் அவைகளில் அநேகம் பெரிதான மஞ்சள் நிறமுள்ள பழங்கள் கா
ய்த்துத் தூங்குகின்றனவென்றும் தகைத்தியந்தீவை (Tahitian Islands) இம்மரங்களே விசேடமாய்ச் சிறப்பிக்கின்றனவென்றும் எல்
லிசென்பவர் தாம் உண்டாக்கிய புத்தகத்தில் எழுதியிருக்கிறார். (Ellis's Polynesian Researches vol. 1. pp 353) மேலும் "இத்தீவி
லும் மற்றுந் தீவுகளிலுமுள்ள எத்தெந்தக் குடிகளுக்குமுன்னேயும்
இரண்டு மூன்று மரமாகுதல் நின்று சஞ்சரிப்பவர்களுக்கு மிகுந்த கு
ளிர்மையுண்டாகுமென்றும்" எல்லிசென்பவரே சொல்லியிருக்கிறார்.
இம்மரங்களின் வேரிலேயும் துருவெடித்து வளர்ந்து பெரிய விருக்க
ங்களாகிறதுண்டு. இவ்விருக்கங்கள் முளைத்து ஐந்துவருடத்துக்குட்
காய்க்கத் துவங்கி ஐம்பது வருடமட்டுங்காய்க்கும். பழங்கள் மற்றெ
ந்தவிருக்கங்களின் பழங்களைப் பார்க்கிலும் மெத்தப்பிரயோசனமுள்
ளதெனச் சொலந்தரென்னுஞ் சரித்திரகாரன் (Solander) எழுதினா
ர். பேர்பெற்ற குருவாகிய எல்லிசென்பவர் இம்மரந் தென் சமுத்
திரத் தீவகத்தாருக்கு (South-sea Islanders) சீவாதாரமாயிருக்கி
ன்றதெனச் சொன்னார். இம்மரத்தைப் பற்றி வெகு இங்கிலீஸ் பு
லவர்கள் மிகவும் அலங்கிருதமாய்ப் பாடியிருக்கிறார்கள்.* இம்மரம்
கருநாடகத்தின் மணல் மிகுந்த காடுகளில் உண்டு. ஆசினிப்பலாமரத்
தினோரினம் (Robenia mitis) கங்கையாற்றின் சதுகல் நிலங்களிலே
மிகுதியாய் உண்டு

பலாமரம் (Artocarpus intigrefolia or the jack-tree) இ
ராக்கிசென்பவருடைய (Dr. Roxburgh) எண்ணத்தின்படி முதி
ன விருக்கத்தைப் பார்க்க, (அ) அடி துவங்கிப், (யஉ) அடி சுற்ற
ளவுள்ளதுமாயிருக்கின்றது பலாப்பழம் முட்டை வடிவமுள்ளதும்,
மிகவும் பெரிதானதும், அறுபது அல்லது எழுபது இருத்தல் நிறை
யுள்ளதுமாய் ஆற்றுக்கணக்கான கொட்டைகளுள்ளதுமாயிருக்கின்
றது. கொட்டைகள் ஒவ்வொரு சுளைக்கொன்றிருக்கும். ஒவ்வொரு
கொட்டையும் மூன்று அலலது நாலு வாதுமைக் கொட்டைகளள
வ பருப்பமுள்ளதாயிருக்கும் இம்மரங்கள் இலங்கைத் தீவுள்ள
(Island of Ceylon or Taprobana of the ancients) நாடுகளாகிய
யாழ்ப்பாணம, கண்டி, திரிகோணமலை, கொழும்பு, மட்டைக்களப்
பு. கற்பிட்டி, நீர்கொழும்பு முதலிய இடங்களில் மிகுதி. அடிமரத்தி
லும் மரத்திலெவ்வொரு வரையிலுங் காய்த்துத்தூங்குகிற காய்க
ளைச் சனங்கள் பலவிதமாய்ப் பாவித்துக்கொள்வார்கள்.

இந்து தேசத்திலுள்ள வருக்கங்களிற் பெரிதும் விலையுயர்ந்தவைக
ளுமாகிய விருக்கங்கள் தேக்கு (Teak tree or the Tektona grandis of Linnæus of the pentandria monogynia class or Verbeneceae family) முதலியவைகளே. தேக்கமரங்கள் மிகவும் நேராயுயர்ந்து
பருத்திருக்கின்றன: இலைகள் இருபதங்குல நீளமும், பதினெட்டங்
குல அகலமுமாயிருக்கின்றன. பூக்கள் சிறியவும் வெண்மையும் வாச
னையுள்ளவைகளுமாயிருக்கும். இவ்விருக்கத்தின் தன்மையும், பிரயோ
சனமும் ஏரோப்பியருக்கு வெகு காலமாய்த் தெரியாமலிருந்தது.
அது மெத்த வயிரமுள்ளதுஞ், சுறுக்குத் சிதைந்துபோகாததுமாய்
இருப்பதாற் கருவாலி மரத்துக்குப்பதிலாக இம்மரமே இக்காலத்தில்
படவுகள், தோணிகள், கப்பல்கள் முதலிய மரக்கலங்களுக்குக் கூ
டியதாய் இருக்கின்றது. இவ்வகை மரங்கள் இந்து சீனம் (Indo-China) இந்து தேசமுதலிய சீமைகளெங்கும் விசேடித்தவைகளுமா
ய், மேல்காத்தாடி மலைப்பக்கங்களிலும் (Western ghauts) அதை
அடுத்த மலைச்சாரல்களிலும் பிரதானமாக பேசின் என்னும ஊருக்
கு (Bassein) வடக்கிலும், வடகிழக்கிலுங் காணப்பட்டிருக்கின்றது.

* The bread-tree, which, without the ploughshare, yields
The unreap'd harvest of unfurrow'd fields,
And bakes its unadulterated loaves
Without a furnace in unpurchased groves,
And flings off famine from its fertile breast:
A priceless market for the gathering guest.

Digitized by Google

கோதாவிரி நதியின் கரையோரமாய் புத்தூன்சா (Potoonshah) என்னும் இடமட்டாக விசாலித்திருக்கிற இராசமகேந்திரி சருக்காரின் காடுகளில் தேக்கமரம் மிகுந்திருக்கிறது. தென் இந்துதேசத்தில் இம்மரம் மிகுந்திருக்கிற டிஸ்திரிக்கிதுவொன்றே. வட கன்னடத்தில் (North-Canara) வருடந் தோறும் வெட்டப்படுகிற தேக்கமரங்கள் மூவாயிரத்துக்கு மேற்படவுண்டு. காண்வாலிசென்னும் ஆண்டவனும் (Lord Cornwallis) கிற்றென்னுங் கேணலும் (Colonel Kidd) இம்மரத்தைப் புதிதாக வங்காளத்திற்குக் கொண்டுபோய் கல்கத்தாவின் விருக்கத்தோட்டத்தில் உண்டுபண்ணி இருக்கிறார்கள். ஐரோப்பையிலிருந்து இந்து தேசத்துக்குப் போக்கு வரத்தாயிருக்கிற கப்பல்கள் தேக்க மரத்தாற் செய்யப்பட்டிருக்கின்றன.

அசோகுமரம் (Mast tree or poon tree called the ponna or the Valeria Indica uvaria altissima) (கூம) அடி உயரத்துக்கு வளருகின்றது. இதுவே கப்பற் பாய்மரங்களுக்குக் கூடியதாய் இருக்கின்றது. கட்டு வேலைக்கேற்ற சிறு மரங்களுமுண்டு; அவையாவன, வடபக்கங்களின் காடுகளிலுள்ள குருமரம், (Koru or Sacoo) நாகாசமரம் அல்லது பாலைமரம் (Nagassa or iron wood) முதலியவைகளே. இலங்கைத் தீவில் மிகுதியாயுண்டாகிற கருங்காலிமரம் (The Indian Ebony) அல்லாபாத்தில் (Allahabad) கங்கையாற்றங்கரையோரமாய் வளருகின்றது.

இந்து மரத்தில் பல இனங்கள் உண்டு. பேரீந்து, தென்னைமரம், பனைமரம், கமுகமரம் முதலியவைகளே. அவற்றுள் பேரீந்து, தென்னைமரம், கமுகு என்பவைகளைப் பற்றி அதிகமாக விபரிக்கவேண்டியதாயிருந்தும், இவ்விடத்திற் சொல்லத் தேவையில்லை. பனைமரம் (The Palmyra tree or Borassus flabelleformis) இந்து தேசத்தின் இந்துசாதி மரங்களுள் மிகவும் உயர்ந்ததாயிருந்தும் பார்வைக்குச் சிறப்பில்லை. ஆகிலுஞ் சனங்களுக்கு மிகுந்த பிரயோசனமுள்ள மரமாயிருக்கின்றது. இம்மரத்தின் தன்மையையும் பிரயோசனத்தையும் பற்றி எழுதுகில் ஒரு பெரிய பிரபந்தத்தை உண்டுபண்ணலாம். ஆகிலுங் கூடிய அளவு சுருக்கமாய்ச் சொல்வேன். பனை மரம் புறவயிரமுள்ளதே அன்றி உள் வயிரமுள்ளதல்ல. ஆகையால் இவ்வினமான மரங்களைப் பெண்மரமெனச் சொல்வது. இந்துதேசத்தின் பல பல பகுதிகளில் இம்மரம் வளர்ந்தும் இதைச் சனங்கள் தங்களுக்குப் பிரயோசனப்படுத்திக் கொள்ள வேண்டிய ஏதுக்களை அறியார்கள். ஆனாலும் இலங்கைத் தீவில் இம்மரம் வளமாய் வளர்ந்திருக்கின்றது. எந்தக் கிராமத்தைப் பார்த்தாலும், எந்தக் கோவிற்பற்றைப் பார்த்தாலும், பனந்தோப்புகள், கமுகந் தோப்புகள், மாந்தோப்புகள், தென்னந்தோப்புகள், பலா, இலுப்பை முதலிய மரங்கள் நிறைந்த தோப்புகளையே அன்றி வேறொன்றும் விசேடித்ததல்ல. ஆகையாற் கனிவருக்கங்களிலுந் தேசவளத்தியத்திலும் திமற்குளிர்ச்சியிலும், சோலைகள், தோப்புகள், நந்தாவனங்களின் சிறப்பிலும் யாழ்ப்பாணத்துக்கு வேறொரு தேசமும் நிகரல்ல. மேலும் ஐரோப்பியா முதலிய சாதிகள் இதைக் காட்டிய இவ்வூருக்கு வருகிறார்கள். சனங்களுக்கு இம்மரமே மிகவும் ஆதாரமாயிருக்கின்றது. எப்படியெனில், பனையோலைகள் வீடு வேயவும், வேலியடைக்கவும் வயல்களிற் பசளைக்கும், புத்தகம் எழுதவுங் கூடும். பனங்காய் உண்பனவுக்குக் கூடும். அஃதியுஞ் சனங்கள் அதனாலப் பனாட்டுச்செய்து வெகு நாளைக்குத் திண்க வைத்துக்கொள்வார்கள். மேலும் பனங்கொட்டைகளை நிலத்தில் தாழ்த்துக் கொஞ்சக்காலத்தின் பின் முளைத்தெழும்பி இருக்குங் கிழங்குகளை அவித்துத்தின்பதும் உண்டு, அவியாமற் காயவைத்து மாவாக இடித்துக் கூழ், பிட்டு முதலியவற்றைச்செய்து சாப்பிடுவதுமுண்டு. ஒடியற்கூழெயன்றி இன்னும் பலவிதக் கூழுமுண்டு அல்லாமலும் முளையெழும்பியிருக்கிற கொட்டைகளை வெட்டி உள்ளிருக்கிற பூரானை வெகுபிரியமாய்த் தின்பார்கள். நளவர், சாணார் முதலிய இழிகுலத்தார் கருப்பநீர் (Sweet toddy,) கள்ளு (Toddy or Palm wine,) முதலியவற்றைச் சேர்ப்பார்கள். மரங்கள் உத்திரங்களுக்குஞ் சலாகைகளுக்குஞ் சட்டங்களுக்கும் ஏற்றது. ஒரு வருஷத்துக்குப் பல இலட்சக்கணக்கான பனை மரங்கள் வெட்டப்பட்டு மறுதேசங்களுக்கு வியாபாரத்துக்கு அனுப்பப்படுகின்றன. அன்றியும் பனங்காய்களை விற்று வெகுசனங்கள் பொருளைத் தேடுகிறார்கள். பனைமரத்துக்குள் இருக்கிற சோற்றியும் அடிமரமும் விறகெரிக்கக்கூடும். ஆகையால் யாழ்ப்பாணமுதலிய நாடுகளில் பஞ்சம்வந்துந் தோற்றாது. விருக்கங்களின் உபயோகத்தைப்பற்றி நல்லவர்களுக வகுத்துக்காட்டிக் கொண்டு போகும்பொழுது சனங்களுக்கு அறிவை, தலைப்படப்பண்ணுமேயன்றி விளப்பமாகாது. ஆகையால விருக்க சாதிகளைப்பற்றிய இவ்விபரங்களை யாவரும் பிரியமாய் வாசிப்பார்கள்.

(இன்னும் வரும்)

இலங்கையின் தன்மை.

[Statistics of Ceylon.]

இலங்கையிலுள்ள நிலங்கள் சிலவிடங்களில் வைக்கல்லுஞ் (Cabook,) சிலவிடங்களிற் கருங்கல்லுஞ், சிலவிடங்களிற் செம்பாட்டுத் தரையுஞ், சிலவிடங்களிற் களிமண்ணுஞ் சிலவிடங்களிற் தொக்குமாயிருக்கின்றன. அவைகள் பெரும்பாலும் பயிரிடுகிறதற்கேற்றவைகளாயிருந்துங் குடிகள் கொஞ்சமானபடியினாலே மிகுதியான பங்கு பாழாய்க் கிடக்கின்றது.

இலங்கையிலுண்டாகிற மரங்களுக்குள்ளே கறுவாவுங் கோப்பியும் பேர்பெற்றவைகள். மேற்கு நாட்டில் மாயவன் ஆற்றுக்குத் தென்புறமாயிருக்கிற பகுதிகளிலும், தெற்குநாட்டிலும் நடுநாட்டிலும் அவைகள் சம்பூரணமாய் முளைக்கின்றன. அவைகளை வைத்து உண்டுபண்ணுகிறதில் இங்கிலீஸ் வியாபாரிகள் இப்பொழுது அதிக முயற்சியுள்ளவர்களாயிருக்கிறதுந் தவிர, கறுவாப்பட்டையையுங், கோப்பிக் கொட்டையையும் மிகுதியாய் வாங்கித் தங்கள் தேசத்துக்கு ஏற்றி அனுப்புகிறார்கள். தீவின் தெற்குப் புறங்களிலே தென்னை, கமுகு, கூந்தற்கமுகு, (Kittul,) கூந்தற்பனை (Tallipot,) பலா, இரப்பலா (Bread fruit tree or Artocarpus incisa) முதலிய மரங்களும், அதின் வடக்குப் புறங்களிலே பனை, மா, புளி, இலுப்பை, வேம்பு முதலிய மரங்களும் அதிகமாயுண்டு. நெல்லு, கேவரகு, சாமை, தினை, வரகு, பயறு, இறுங்கு, சோளம், எள் முதலிய தானியங்களும், புகையிலையுஞ், சணலும், பருத்தியும், மருந்துக்கான பலவித பூண்டுகளும், காய்கறி பதார்த்தங்களும், எல்லாவிடங்களிலும் நன்றாய் வளருகின்றன. கருங்காலி, முதிரை, பாலை, சமுன், உசில முதலான தச்சவேலைக்கேற்ற மரங்களுள்ள விஸ்தாரமான காடுகளுமுண்டு. நீர்கொழும்பிலும், அதற்கடுத்த கிராமங்களிலுந் தேக்கமரம் மிகுதியாயுண்டு. பலவிடங்களிலும் விசேஷமாகக் கற்பிட்டி, மன்னார், வன்னி, யாழ்ப்பாணத்தீவுபற்றிலுஞ் சாயவேர் தானாய் முளைக்கின்றது.

நடு நாடு பற்றின் சிலமலைகளிலும், ஆறுகளிலுமிருந்து சிவப்பு, கோமேதகம், புஷ்பராகம், வைடூரியம், நீலம், படிகம் முதலிய இரத்தினங்கள் அகப்படுகின்றன. பொன் மட்டும் இல்லை. இரும்புக்கல்லும், இயமணலும் (Plumbago,) வெடியுப்புஞ் சிலவிடங்களிலுண்டு. கறியுப்பு தானாகப்படுவதுஞ், செய்கையும் ஏராளமாயிருக்கின்றது; அதிலே கோவர்மேந்துக்கு வருஷந் தோறும் ஏறக்குறைய நலது பவுனளவுக்கு வருமானமுண்டு. பட்சிகளில் அநேக விதமானவைகள் இருக்கின்றன. கடலிலும், ஆறுகளிலும் பலவகை மீன்களும், பெரிய முதலைகளுமுண்டு. வடமேற்குப் புறக்கடலில முத்துஞ், சங்குமகப்படுகின்றன. கற்பிட்டிச் சிறுகடலில ஒருவிதமான பாசியும் (Sea Moss,) கடலட்டையும் (Bicho de mar) அதிகமாய் உண்டாகின்றன. அவைகள் இரண்டையும் அவ்விடத்திலுள்ளவர்கள் எடுத்துச் சக்காக்கிப் பறலூர் வியாபாரிகளுக்கு நல்ல விலைக்கு விற்கிறார்கள்.

சாதுவான மிருகங்களில ஆடு மாடு மிகுதியாயிருக்கின்றன. குதிரையுங், கழுதையுஞ் சிலவிடங்களில் மாத்திரமுண்டு. காட்டு மிருகங்களில யானை, புலி, கரடி, மரை, மான், நல்வாய், பன்றி, முயல், நரி, குரங்கு பிரதானமானவைகள்.

அநேக விதமான பாம்புகளும், மற்றும் விஷ செந்துக்களுமுண்டு. மலைப்பாம்பெனப்பட்ட பாம்பு (Boa Constrictor) மான்களை முதலாய்த் தன் வாலினாலே சுற்றிப் பிடித்து விழுங்கும்.

இலங்கையின் வியாபாரமானது நாள் வளர்ந்தேறிக்கொண்டு வருகின்றது. பிறசட்ட ஆஅளகக ஞூ ஏற்றுமதியான சரக்குகளின் விலை பவுண், ளாசுகநூஅச. இறக்குமதியான சரக்குகளின் விலை பவுண் ளாஅகூநூாகஉ.

இத்தேச ஆளுகையை நடத்தும்படிக்கு கோவர்னரென்னப்பட்ட (Governor) பெரிய துரை ஒருவரும், அவருக்கு உசாவுதுணைகளாக மனைக்கூட்டிய (Executive) சபையும், வச்சனைக்கூட்டிய (Legislative) சபையுஞ் சொல்லப்பட்ட இரண்டு சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தச் சங்கங்களில் முந்தினதற்கு ஐந்து துரைகளும் பிந்தினதற்குப் பதினைந்து துரைகளும் அவயவர்களாயிருக்கிறார்கள். ஒரு சங்கங் காரியங்களை நடப்பிக்கின்றது, மற்றொரு சங்கம் பிரமாணங்களை விதிக்கின்றது. குடிகளின் வியாச்சியங்களை விசாரித்து நீதியை நடப்பிக்கும்படி டிஸ்திரிக் கோட்டென்னப்பட்ட (District Courts) நியாயஸ்தலங்கள் தீவின் பல நாடுகளிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த நியாயஸ்தலங்களின் நடபடியைப் பார்வையிடவும், பெரிய குற்றங்களைப் பரிசோதித்துத் தீர்ப்புப்பண்ணவுஞ் சுப்ரீங் கோட்டென்னப்பட்ட (Supreme Court) மேலான நியாயஸ்தலம் கொழும்பில இருக்கின்றது. ஒரு பெரிய நியாயபதியும (Chief Justice,) இரண்டு உதவி நியாயபதிகளும்

Digitized by Google

(Puisne Justices,) அந்த நியாயஸ்தலத்துக்கு ஏற்பட்டிருந்து ஒருவர் மாறி ஒருவர் வருஷத்துக்கிரண்டு முறை ஒரு திசைக்குப் போய் அங்குள்ள வியாச்சியங்களை விசாரித்துத் தீர்ப்புப் பண்ணுவார்கள்.

கோவறன்மேந்தின் வருமானங்களை வருவாக்கவும், மற்றும் அலுவல்களை நடப்பிக்கவும் ஒவ்வொரு பிரதான நாட்டுக்கு ஒரு காரியகர்த்தனும் (Agent,) ஒவ்வொரு சிறு நாட்டுக்கு ஒரு துணைக்காரியகர்த்தனும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். S. C. C.

[இன்னும் வரும்]

புதினப் பத்திரிகை.

முகாமைக்காரரே,

அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் அருளொளியிருக்கையால் அதனுண்மைகளைப் போதிக்க விரும்புகிறவர்கள் அக்காலங்களினிகழ்ந்த சிற்சில அற்புதங்களை மாத்திரம் அத்தாட்சிப்படுத்திச் சாதிப்பது போல, இக்காலத்திலும் வேதாரணியம் தருமலிங்க சுவாமிகளில் அவ்வருளொளி மகிமை விளங்குவதினால் அதிற் சந்தேகவிபரீதங்கொள்ளாமற் சித்தசுத்தியுள்ளவர்களும் சத்திய சமாதானிகளுமாயிருக்கிற நீங்கள், சகல சனங்களுமறிந்து உய்யும்பொருட்டு உதயதாரகைப் பத்திரத்திற் பின்வரும் புன் கவியைப் பதிப்பித்துவிடும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆசிரிய விருத்தம்.

சத்திபெறலாம்புத்திமுத்தபெறலாம்பவுத்திர புத்திராதிபெறலாத்
தொலையாதகுன்மகயரோகமுதலேய்கனொரு சொல்விலே சுத்திபெ
றலாம் [லாம்
பத்திபெறலாங் குருடு கூன் செவிடு சப்பாணி பரிசுத்தமாகை பெற
பயமறுபூதப்பிரேதப்பசாசுகள் பறந்தோட வெற்றிபெறலாஞ்
சுத்திபெறலாஞ் சுத்தவித்தைபெறலாஞ்செயச் சிற்சுருபமகிமைபெ
றலாஞ்
சிவயோகமாதிபலவகையோகசாதனச் சிவபோகதிர்த்திபெறலாஞ்
சத்திபெறலாஞ்சைவ தர்மலிங்கச்சாமி சந்நிதியலடந்துபணியின்
சற்சங்கசகலசனசமையபரிபாலரே சத்தியஞ்சத்தியமிதே.

யாழ்ப்பாணம். நல்லூர் மனப்புலி முதலியார்
இஆசகரூ சரவணமுத்து.

தருமலிங்கர் அற்புதப்பிரபலிய சம்பாஷணை.

[A Dialogue between a Tamulian and a Christian Student at Batticotta Seminary on the supposed Miracles of Tammalingam.]

மாணுக்கன். ஏது, நாம் எங்கே இருந்து வருகுது?

தமிழன். இதார்! தம்பியோ? நான் இப்போ ஊர்காவற்றுறைக்குச் சும்மாக ஒரு அலுவலாய்ப் போய்வருகிறேன்.

மா. என்ன அலுவலோ?

தமி. இந்நாட்களிலே வேதாரணியத்துக்குப் போகவேண்டிய அலுவலாய் இருக்குது.

மா. என்ன அலுவலாக்கும்?

தமி. என்னுடைய மருமகன் பையனொருவனை வேதாரணியத்திலே ஒரு பெரியவர் இருக்கிறாராம், அவரிடத்திற் கொண்டுபோக வேண்டியதாயிருக்குது.

மா. ஏது, பையனை அவரிடத்திற் படிக்கவிடவோ?

தமி. இல்லை, போன வருஷம் அவன் புளிய மரத்திலேறிப் புளியங்காய் ஆஞ்சாப்போல் விழுந்து கால் முறிந்து சொத்தியாய்க் கிடக்கிறன், ஓய் அருமந்தாப்போலே காணி பூமி செய்துவந்த பையன் வீட்டிலே முடங்கிக்கொண்டுகிடக்கிறது பெரியமுட்டாய் இருக்குது.

மா. அதற்குப்பின்னை அவனை வேதாரணியத்திலே விட்டுவிடப்பார்க்குதோ?

தமி. அப்படியல்லக் கேள், வேதாரணியத்திலே தருமலிங்கமென்றொரு பெரியவர் வெகு வெகு துன்பதுயரங்களை மாற்றுகிறரென்றும், இவ்விடத்திலும் சில சில பெயர் அங்கே போகிறார்களென்றுங் கதையாயிருக்கிறபடியால் இந்தப் பையனையுங் கொண்டுபோய்ப் பார்க்கலாமென்று நினைக்கிறேன்.

மா. பண்ணுகத்திலே உமையற்றை மகனிருக்க அவ்வளவு தூரத்துக்குப் போகவேண்டியதென்ன?

தமி. உமையற்றை மகன்தான் மருந்துபோட்டு மாறிப்போச்சுது. ஆனாலும் அந்த எலும்புமுறிவாகத் தோவிலே தாங்குகிறபடியால் பையனாலே நடந்துகொள்ளக்கூடாது. அதற்குத் தான் ஒரு வழி பார்க்கலாமென்று நினைக்கிறேன்.

மா. நோமாறிப் புண்ணுமாறிப்போன காரியத்துக்கு இனி அவரென்ன மருந்து செய்கிறது?

தமி. அல்லத்தம்பி அந்தப் பெரியவர் உனக்குச் சுகம்போவென்று ஒரு சொல்லுச் சொல்ல சுகம் வருமென்று பேசுகிறார்கள். அதைத்தான் நம்பி அவனைக்கொண்டுபோகப் பார்க்கிறேன்.

மா. அப்பப்பா, இது, இவ்விடத்திற் புரளியைப் பார்க்கவென்ற புரளியாய் இருக்குது. இந்தப் புத்தி உமக்கார் சொல்லித்தந்ததோ?

தமி. நீயென்ன அந்த வேதாரணியத்திற் காரியத்தை இல்லையென்கிறயோ?

மா. அதற்கல்ல, மருந்துகொடாமல் வியாதியை மாற்றுகிறதற்கு இந்த ஊர்களிலும் அநேக பெரியோர்களிருக்க நாம் இந்த மலையேறிக் கடலேறி வேதாரணியத்துக்குப்போக நினைத்தது மெத்தப் புத்தியீனம்.

தமி. அது இவ்விடத்திற் காரியமெல்லாங் சோவாய் இருக்குது. முன் கந்தஞானியார் சில பல துன்பங்களைக் கையம்பாக மாற்றினரென்று கதை. ஆனாலும் அவர் செத்தாப்போல அவரைப் பின்பற்றித்திரிந்தவர்கள் எல்லாரும் எனக்கு உனக்கு என்று இழுபறிப்பட்டுக்கொண்டு ஏதடையாக ஒருதற்றை தந்து ஒருதற்கு விளங்காமல் இங்கே ஓடுதெடா பேய் அங்கே ஓடுதெடா நோய் என்று புருடா விடுகிறகதையையும், வேதாரணியத்திற் தருமலிங்க சுவாமியுடையகதையையுமல்லோ சரிக்கட்டிப் பேசப்பார்க்கிறாய். போ, போ.

மா. ஓய், வேதாரணியத்தில ஒரு ஆளானால் இங்கே ஒன்பது ஆட்கள் இருக்கிறார்கள்.

தமி. அதுகாரியம் வேறே இதுகாரியம் வேறே.

மா. ஆம்மா, அந்தத் தருமலிங்க சுவாமியுடைய காரியம் எனக்கு மெத்தவிளங்கவில்லை. அறிந்த நாம் அதை யெட்பென் விளக்கமாய்ச் சொலல.

தமி. நான் அவற்றை காரியங்களைட்போய்க் கண்டவனல்ல. ஆனாலும் கேள்விப்படி சொல்லுகில, அவர் செய்யும் அற்புதங்களுக்கு ஒரு கங்குகரையில்லையாம்.

மா. நாம் அந்த அற்புதங்களிலே கொஞ்சஞ்சொல்ல.

தமி. கூன், குருடு, செவிடு, மலடு, முடம் நீரழிவு, மாறுத குன்மம், பாண்டு முதல் அற்ப வியாதிகளுள்ளவர்கள் ஆயிரம் இரண்டாயிரம் மூவாயிரமாகப்போய்ச்சேர எல்லாரையும் வரிசையாய் இருத்தி உங்களுக்குச் சுகம் போங்களென்று ஒரு சொல்லுச் சொல்ல எல்லாருஞ் சுகப்படுகிறார்கள். அவருடைய ஒரு சொல்லுக்கு என்ன வியாத்தான் மாறுது?

மா. ஒரு ஊரிலே எல்லாருங் காகமாய்ச் சத்தியெடுக்கிறார்களென்ற கதை கேள்விப்படவில்லையோ?

தமி. அதென்னகதை! வயிற்றிற்கே காகமெங்காலே?

மா. நாம கேளுக்கவேண்டாங் கேட்க, பலபேர் கூடியிருந்த இடத்திலே ஒருவன் சத்திக்க அதைக் கண்ட மற்றவன் கரிகரியாய்ச் சத்தியெடுக்கிறானென்ன, அதென்னபோலென்று பின்னை ஒருவன் கேட்க அது காகம்போலென்றும் மற்றொருவன் சொல்ல, அதெத்தனை போ சத்தியெடுத்ததென்று வேறொருவன் கேட்க, இரண்டு பேர் காகம் சத்தித்தார்களென்று அடுத்தவன் சொல்ல, இரண்டோ மூன்றோ என்று பின்னொருவன் கேட்க, நாலோ அஞ்சோவாமென இப்படியே கதை திரிந்து திரிந்து ஊர் எல்லாங் காகமாய்ச் சத்தியெடுக்கிறார்கள் என்று பரம்பிற்று. இது போலத்தான் நாம் சொன்ன கதையுமிருக்குது.

தமி. இது நான சொன்னதல்லவே; ஊர்முழுதாய் அல்லோ சொல்லுகிறார்கள்.

மா. இந்தக் காரியம் ஊர்முழுதாகச் சொன்னாலும் காகஞ் சத்தியெடுக்கிற காரியம் உலகம முழுதாய்த் தெரிந்த காரியமல்லவோ. ஆகையால ஊர் பேசுகிறதினாலே ஒன்றை மெய்யென்று எடுக்கக் கூடாது. [சகிலலே

தமி. அப்படியல்ல. இது நிசமான காரியம்; இதில் யாதொரு பி

மா. எப்படி, எப்படி நாம்தானே முன்னம்மே இது நான் கண்ட காரியமல்ல, நான் கேள்விப்பட்ட காரியமென்றது. பின்னை நிசம நிசம் என்று சொன்னாப்போல எப்படிச் செல்லும்?

தமி. அல்லலல, வீண் கதையை விட்டுவிடு இது வெகு பேர் போய்க் கண்டறிந்து வந்தகாரியம.

மா. என்ன நாம் சுத்த சைவனாய் இருந்தும் நம்முடைய சொந்த மார்க்கத்துக்கு விரோதமாக இப்படி இந்தக் காரியங்களை எடுத்து நிறுத்தப் பேசலாமா?

தமி. சிவ, சிவ எனிதினாலே மார்க்கத்துக்கு என்ன விரோதமோ?

மா. என்ன, உலகத்திலே செனனமெடுத்துப் பிறக்கப்பட்ட உயிரெல்லாம் ஆகாமியம், சஞ்சிதம் பிராரத்துவமென்னுங் கனமங்களுக்கு முட்பட்டுத் தத்தம வினைப்பலன்களை அனுபவிக்க வேண்டுவதாய்ச்

Digitized by Google

சைவ சமயஞ் சொல்லியிருக்க, ஒருத்தனுக்குள்ள பிராரத்துவ அநுபவத்தை அது இன்பமானாலுந் துன்பமானாலும் அந்தந்த ஆற்றுமாய்ப் பட்டுத்தீர்க்கவேண்டியதாகையால் அச்சக் கன்மத்தினால் வந்த தோஷத்தை ஒருவன் ஒருசொல்லிலே மாற்றக்கூடுமென்பது விரோதம். இதுவுமன்றிப் பூருவ சரித்திரங்களைப் பார்த்தால் தேவர்களுந் தங்கள் செய்கிறித்தியங்களினாலே வந்த தோஷத்தைபரமசிவன் தானுந் தீர்க்கக்கூடாதபடி அநேக விதமான யாகங்களை யனுட்டித்துத் தவசுபண்ணினாரென்று சொல்லியிருப்பதனாற் பரமசிவனாலுந் தீர்க்கக்கூடாத கன்மதோஷங்களை எப்போதும ஒருமனிதன் தீர்க்கக்கூடுமென்பது சைவ சமயத்தைப் புரட்டுகிறதாய் முடியும்.

தமி. நல்லது, தருமலிங்கசுவாமியினுடைய அற்புதங்கள் உண்மையில்லாதிருந்தால் தமிழர் இவ்வளவு ஏடுபடுவார்களோ?

மா. தமிழர் எடுபடுகிற காரியத்தை நாம் பேசவேண்டாம். ஏனென்றால் அற்புதம் நடக்குதென்று சொன்னால் தமிழரிடத்திலென்றுமில்லை, சோனகரிடத்திலென்றுமில்லை, உரோமான்காரரிடத்திலென்றுமில்லை. எங்கும் ஓடிப் போவார்கள். புதுமடத்திற் செவ்வலங்கியார் கோவிலிலே அற்புதம் நடக்குதென்று தமிழரிலே பிள்ளையில்லாதவர்கள் எத்தனைப்பேர் போய்ப் பிள்ளைவரம் பெற்றுவந்தார்கள். இவ்விடத்திலும் எத்தனை தமிழர் சில பல துன்பங்களுக்கு அடைக்கலமாதாவின் கோவில் காக்கிறார்கள். வடதேசத்திற் சோனகருடைய மீராசாய்ப்புபள்ளிவாசலுக்கு எத்தனைபேர் நேத்திக்கடன்கள் கொண்டுபோய்த் துன்பஞ் சுகமாய்வருகிறதென்கிறார்கள். இந்த அறிவில்லாத பேய்ச் சாதியுடைய மனம் எந்த அற்பமான காரியத்திலும் எடுபடுகிறதினாலேதானே உள்ளது இல்லாதது எல்லாம் ஒருமிக்கக்கூடி வெய்க்கத் துடங்கிக்கொண்டது.

தமி. நீ என்ன சொல்லுகிறாய், தருமலிங்க சுவாமி செய்கிறது வெய்ப்புக்காரியங்களோ?

மா. வெய்ப்புக்காரியமென்று நான் சொல்லவேண்டியதென்ன? வடக்கேதானே வெய்ப்புக்காரனென்று பிடித்து விலங்கோ தலங்கோ போட்டிருக்குதாம்.

தமி. நல்லது, நீ இது எல்லாக் காரியங்களையும் இல்லையென்று அழித்து வருகிறாய் இவ்விடத்திலே வேதாரணியத்துக்குப் போய் வந்த மானிப்பாயாருஞ் சண்டிருப்பாயாருஞ் சுகமாய் வந்திருக்கிறார்களாமே அதற்கென்ன சொல்லுகிறாய்?

மா. அவர்களுக்குச் சுகமென்று ஆர் சொன்னது? சண்டிருப்பாயிலே சிலருக்குத் தானங்கொடுத்தாச்சுதாமே.

தமி. அல்ல, அவர்களுக்குச் சுகமென்றுதான் ஊர் எல்லாஞ் சொல்லுகுது ஊரை உலைமூடியால் மூடப் பார்க்கிறாயே.

மா. ஊர்ப் பேச்சை நம்பப்படாதென்று நான் முன்னம் உதாரணங் காட்டினேன். அதை நம்பப்படாது.

தமி. நல்லது இங்கேவா. வெளிக்கிடு அவர்களிடத்திற் போய்க்கேட்போம் வா.

மா. ஏன் என்னை இழுக்குது கையைவிடச் சொல்லுகிறேன் அவர்களுஞ் சுகமென்று சொல்லக்கூடும. அவ்வளவு தானில்லாமல் வேதாரணியத்துக்குப் போனதினாலே என்ன பலன் சுகமாகவேணுமென்றுதானே விரும்பிப் பிரயாசப்பட்டுப்போனார்கள்.

தமி. என்ன! நகுநகுத்த பேச்சாய்ப் பேசுகிறாய். அவர்களுக்குச் சுகமில்லையென்றுதான் சொல்லுகிறாயோ?

மா. நானேன் அவர்களுக்குச் சுகமில்லையென்று சொல்லுகிறேன். அவர்களுக்குச் சுகமாய்விட்டாலும் அது தருமலிங்க சுவாமிமாற்றினாரென்று முடியுமோ?

தமி. என்னடா. இதற்கென்று தூரத்துமணியங்கட்டித் தருமலிங்க சுவாமியைத் தரிசிக்கவேண்டுமென்று போய்த் துன்பமுஞ் சுகமாய் வந்திருக்க, இதற்குக் கூடவல்லோ பிசகுசொல்லப்பார்க்கிறாய்.

மா. இங்கே கேட்க, அந்தத் துன்பக்காரர் வெகு நாளாய் வீடடங்கியிருந்து பிற்பாடு கடலேறி மலையேறிப் பிறவூருக்குப்போய் வந்ததினாலே தேசப் பேர்ச்சி, காற்றுப்பேர்ச்சி, தீன் பேர்ச்சி, சரீரப் பேர்ச்சி முதலான வித்தியாசங்களினாலே உடம்புக்குச் சில சவுக்கியங் காணக்கூடும். ஆனாலும் மறுபடி அவ்விடத்திலே வந்திருந்து நாட்பட்டால் அந்த வியாதிகள் மறுபடியும் வருத்தம்பண்ணக்கூடும்.

தமி. நல்லது, அவர்களுக்கு அந்த வியாதி. துஞ்சறமாறி மறுபடி வராதிருந்தால் அப்ப என்னபுத்தி?

மா. அப்படித்தான் முற்றும் மாறிப்போனாலும் அதிலே காரியமென்ன? வெகுபேர் சடுதயான கோபத்தினாலே துக்கத்தினாலே சந்தோஷத்தினாலே துன்பமாறுகிறதுஞ், சாகிறதும், துன்பம் நீங்கிப்போகிறதும் உண்டு. இன்னும் அநேகர் ஒரு காரியத்திற் தங்களுடைய மனதை அழுத்தி மனம் நம்பிப் பாவிப்பதினால் வெகு வியாதிகள் நீங்கிச் சுகமடைகிறார்கள்.

தமி. மனதிலே நம்புகிறதினாலே எப்படிச் சுகம்வரும் நீ பேசுகிறது விறுதாப்பேச்சு.

மா. அதைச் சொல்லுகிறேன் கேட்க, துன்பமாயிருக்கிறவர்களுக்கு வேதாரணியத்திலே ஒருதன் இருந்து எல்லாருக்குஞ் சுகங்கொடுக்கிறானென்று சொல்ல. ஆ! எது? என்ன? என்று அங்கலாய்ப்புடனே விசாரித்து மனதை அதிலே அழுத்தி இன்ன நாளைக்குப் பயணம் புறப்படுவேன் என்று தீர்த்துக்கொண்டு மனதைஅதிலே சிந்தனைபடக்கவிட்டிருக்க இரவிலேகனவுங் காணக்கூடும். அதை விசுவ நினைத்துப் பார்க்கிறபொழுது நற்சகுனமென்று எண்ணி நினைத்துக் கொண்டுவர வியாதி இங்கேதானே கொஞ்சந் தணிகிறது போலேதான் இருக்கும். பிறகு தான் பயணம்போகிற நாள் எப்போ எப்போவென்று ஆவலோடே பார்த்திருக்க அந்த நாளும் வந்து தன் பயணத்துக்குத் தோணியேறிவிட்ட சந்தோஷத்தினால் அன்றைக்கும் ஒருபங்கு வியாதி தணிகிறதுபோல் இருக்கும். தோணி பாயிழுத்தோடித் தோணிக்காரன் வேதாரணியங் கண்டேனென்று சொல்ல இன்னும் ஒருபங்கு வியாதி தணிகிறதுபோல் இருக்கும். வேதாரணியத்திற் கரையிலே இறங்க இன்னும் ஒருபங்கு வியாதி தணிகிறதுபோல இருக்கும். தருமலிங்கத்தைக்காண வியாதி முற்றுகப் பறந்து ஓடுகிறதுபோலவும் இருக்கும். அவர் உனக்குச் சுகம்போவென்று சொல்ல மாறினதாக மனம் நம்பி வியாதி சுகப்பட்டதாய் எண்ணி அநேகர் சகாயமடையவுங் கூடும். அதினாலே தருமலிங்கமிடத்திலே யாதொரு தேவமூலமுண்டென்று கொஞ்சமும் நினைக்க இடமில்லை.

தமி. மனம் நம்பினாற்போல் இல்லாதகாரியம் நடந்தேறுகிறதுண்டோ.

மா. ஏன் ஓணான் விழுங்கித் துன்பமாய்க்கிடந்தவனுடைய கதை நாம் கேள்விப்படவில்லையாக்கும்.

தமி. அதென்னடா அப்பா எப்பன்சொல்லு.

மா. ஒருவனுக்குத் தண்ணீர்விடாயெடுத்து ஓர் ஆற்றங்கரையிற் அவன்போய் இரண்டுகையினாலுந் தண்ணீரை அள்ளிக்குடிக்க வாய்க்கெடுக்கிறபோது, மேலே இருந்த மரக்கொம்பிலேயுள்ள ஒரு ஓணானுடைய நிழல் அந்தத் தண்ணீரிலே ஆசாட்டமாய் விழுந்ததைக்கண்டுங் காணாததுபோலக்குடித்து ஐயய்யோ ஓணானை விழுங்கிவிட்டேனேயென்று சத்திச்சுச் சத்திச்சுத் துன்பமாய்க்கிடக்கப் பரிகாரிமாரும் வந்து மருந்துகளெல்லாஞ் செய்து ஒன்றிலுஞ் சத்திமாறாமலிருக்க ஒருவன் உபாயமாக ஒரு ஓணானைப்பிடித்து அந்தத் துன்பக்காரனை அறியாமல் மறைத்து வைத்துக்கொண்டு அவனுக்கு விரேசனங்கொடுத்துக் கண்ட அவனுடைய பேதியிலே அதைக் காணமல் மெள்ளப்போட்டுவிட அதைக்கண்ட அந்தத் துன்பக்காரனுடனே வியாதிதீர்ந்து சுகமடைந்தான். வேறொருவனை நாலுபேராய்க்கூடி நீ செத்துப்போகப்போறாய் எனப் பயமுறுத்த அவன் செத்துப்போனான். இப்படி அநேகங் காரியங்கள் நடந்ததுண்டு.

தமி. இப்படி எங்கேயாகுதல் அபூருவமாய் ஒவ்வொரு காரியம் மனநினைப்பினால் நடந்து போகவுங்கூடும. அதினாலே தருமலிங்க சுவாமியிடத்திற் போகிறவர்களெல்லாருக்குஞ் சுகங் கிடைக்கக்கூடுமோ?

மா. உது எந்த மூலைக்கு. உலகத்திலே அவரைவிட மகாதந்திரிகள் இருந்தார்கள். அவர்கள் மாற்றின துன்பங்களையும், அடைந்த கீர்த்திகளையும் சொல்லப்போனால் அதிசயிக்கவேணும். அவைகளுக்குக் கங்குகரையில்லை.

தமி. அதிற் கொஞ்சஞ்சொல்லுங் கேட்போம்?

மா. எனக்கு முழுதுஞ் சொல்லுகிறதற்கு நேரமில்லை. ஆகிலுங்கொஞ்சஞ் சொல்லுகிறேன். ௲௭௱௮௰௪-ம். மெஸ்மர் என்றொருவன் (Mesmer,) பிராஞ்சிதேசத்திலே (France) எழும்பி உலகத்திலுள்ள சகல வியாதிகளையும் மாற்றுகிறானென்று பெயர்கட்டி அவனும் அவனுடைய கூட்டாளியாகிய தெல்சனென்பவனும் (Delson) வெகு வியாதிகளைமாற்றி வந்ததாய்ப் பேருண்டானதால் பிராஞ்சுதேசத்து இராசா மிகவும் பிரமித்து ஒரு ஆலோசனைச் சங்கத்தைக் கூட்டிவைத்து அதிலே படிப்பாளியாக ஐந்துபேரைத் தெரிந்து மெஸ்மர், தெல்சனென்பவர்கள் செய்துவருகிற காரியங்கள் மெய்யோ பொய்யோவென்று விசாரணைபண்ணிவரும்படியாக அனுப்பினார். அவர்கள் போய்ப் பலவிதமான சோதனைகளினாலே அவர்கள் செய்துவந்த காரியந் தந்தரமென்றும், அவர்களுடைய தந்திரத்தை நம்பி எடுபட்ட மூடச்சனங்களுக்கு மாத்திரம் அது பலித்ததாகவும் அப்பாலது ஒருத்தருக்கும் பலியாமற்போனதாகவும் அந்த விசாரணைக்காரர் இறப்பொடுத்துப்பண்ணினார்கள்.

Digitized by Google

தமி. நீ சொல்லுகிற காரியமெல்லாம் நிசம்போலத்தானிருக்குது. ஆனாலும் இப்படியெல்லாரையும் வேய்ப்பினாலும், மன நம்பிக்கையினாலுஞ் சுகமாக்குவேனென்று ஒருவன் துணிகிறதல்லோ வருத்தம்.

மா. அதற்கென்ன, இடங்கண்டால் ஆர்தான் விடுவான். சூளாகூஎம், ஆண்டிக்பேக்கின்ஸ், (Perkins,) என்றொருவன் எழும்பித்தான் சகலவியாதிகளையும் மாற்றுகிறேனென்று துணிந்து இரண்டு உருக்குக் கம்பிகளை நீட்டி அவைகளாலே துன்பக்காரருக்குத் தடவ எந்தெந்த வியாதிகளுஞ் சுகமாகிறதாய்ப் பேர்கட்டி பேர்க்கின்ஸ் என்பவன் அமெரிக்காவைவிட்டு, (America,) இங்கிலாந்து, (England,) அயர்லாந்து, (Ireland.) ஸ்கோத்திலாந்து, (Scotland) முதலான இடங்களுக்குப்போய் ஆயிரம் பதினாயிரம்பேரை ஒவ்வொருமுறையிலே தன்னிடத்தில வரச்செய்து சிலையில் இராசாவிடத்திற்போய் இந்தத் தொழில் தனக்கென்றதாக ஒரு இராசதானியப்பட்டையமும் வாங்கிக்கொண்டு இலட்சத்து முப்பதினாயிரம்வரைசாலும் அவ்விடத்திலே சம்பாதித்துக்கொண்டு தன் ஊருக்குப்போய்விட்டான். இந்தத் தந்திரத்தைச் சோதிக்கும்படி ஏகாத்தென்ற (Dr. Haygarth) டாக்குத்தர் அவன்கொண்டிருந்த ஆயுதங்களுக்குப்பதிலாக இரண்டு தடியிலே இணைக்கி இது அவனுடைய ஆயுதங்களென்று தந்திரமாய்ச்சொல்லி சூளாகூகும், ஞா. தைமீ, எதி. வாதக்காரர் ஐந்துபேருக்குத் தடவினான். அதில் மூன்றுபேருக்கு உடனே சுகங்கண்டது. ஒருவன் முன்னமே முடங்கியிருந்தும் முழங்காலிலே ஊடுகண்டும் மெல்லமெல்ல நடந்தான். இப்படிப்பலபல வியாதிகளை யிவர்களுஞ் சுகமாக்கி அவன் செய்ததெல்லாந் தந்திரமென்றுஞ் சுகப்பட்டவர்களுக்கு மனநினைப்பினாலே அப்படியானதென்றும் வெளிக்குவர அவனுடைய கூத்தும நின்றுபோயிற்று.

தமி. நீசொன்ன இந்தக் கதைகளினாலே துன்பங்கள் மனநினைப்பினாலும், நம்பிக்கையினாலும், மாற்றுகிறதென்பது என் மனதுக்கு நிசமாய்க்காணுது. ஆனால் அந்தப் பேய்க்குஞ்சுவென்ற (Perkins) நீசொன்னவன் பணவரவுக்காக அப்படி ஒரு தந்திரத்தைச்செய்தான். ஆனாலும் தருமலிங்கசுவாமி ஒருவரிடத்திலும் ஒருசல்லிதானும் வாங்குகிறதில்லையாமே? அவர் வைத்துக் கட்டி நடக்கவேண்டியதென்ன?

மா. ஒருவன் எப்படித் துணியக் கூடுமென்று நாம் கேட்டதற்கு நான் இந்தக் கதைசொன்னது ஏனென்றால் பணம்வாங்கிச் சுகமாக்குகிறேனென்று துணிந்தாலல்லோ பெரியதுணிவு. ஒருவன் பணம் வாங்காமற் தருமத்துக்குச் சுகமாக்கிறேனென்றாற்தான் அவனிடத்தில் வெகுபெயர் உண்மையென்று நம்பிப்போவார்கள்.

தமி. அப்படியானாற் பின்னை அவருக்கு என்ன பிரையோசனம்?

மா. அவரைச் சுவாமி சுவாமியென்று நமஸ்கரித்து வருகிற சங்கைபோதாதோ?

தமி. அப்படி யாருஞ் செய்ததுண்டோ?

மா. அப்படி வெகுபெயருண்டு. தூகூாகூஉம். ஆ. அயர்லாந்துவென்னும் ஊரில், (Ireland) வாலந்தின் கிரீற்றிரேக்குசென்பவன், (Valantine Greatreaks) ஒருவரிடத்திலும் பொருள்வாங்காமல் எந்தெந்த வியாதியையும் தன் கையினாற் தடவிச் சுகமாக்கிவந்ததுமல்லாமல் அவனுடைய கைமேசுபட்ட வியாதிகளும் மாறிப்போனது. அப்படியே இத்தாலியாதேசத்தில், (Italy) பிராஞ்சிஸ்பால்கோனி (Francis Balcony.) என்பவனுஞ்செய்து சுகப்படுத்தி வந்தான். இவர்களிடத்திற்போய் சுகமடைந்து வந்தவர்கள் தங்கள் மனநினைப்பினாற் சுகமடைந்ததன்றி மற்றும்படியல்ல.

தமி. நீ இப்பொழுது சொன்ன ஆட்கள் கையினாலும், மேசினாலுந் தடவிச் சுகமாக்கிறதாகவல்லோ முடியுது. ஆனாலும் தருமலிங்கசுவாமி உனக்குச் சுகம்போவென்ற ஒரு சொல்லுச்சொல்லச் சுகமாகுதாமே. பின்னை அதை எப்படித்தந்திரமென்று சொல்லுகிறாய்?

மா. நாம் இதைத்தான் கண்டுதோ? ஆஸ்டின் (Austin) என்றொரு மகாதந்தரி. தூஅாஅம், கூம் யம், ஆண்டுகளில் அமெரிக்காக் கண்டத்திலுள்ள ஐக்கியதேசத்தில், (United States.) உள்ளவேர்மான்ற, (Vermont.) என்னும் ஊரிலே எழும்பித்தான் சகலவியாதிகளையும் மாற்றுகிறேனென்றும், தன்னிடத்தில் வியாதிக்காரர் வரவேண்டியதில்லையென்றும், அவர்கள் எவ்வளவு தூரத்திலே இருந்தாலுந் தங்கள் தங்கள் வியாதிகளை ஒரு சீட்டிலே எழுதிவிட்டாற் போதுமென்றுஞ் சம்பிரதாயம்பண்ணிவரக் கொஞ்ச நாளைக்குள்ளே அவனிடத்திற் கணக்கில்லாத சனம் போய் அடைந்தார்கள். துன்பக்காரர் அனுப்பின சீட்டுக்களின் மிகுதியினாற் தவாற்காரர் அழுதழுது சுமந்தார்கள். பின்னைத் தருமலிங்கசுவாமியையோபோய்க் காணவேண்டியதாய் இருக்க இவருக்குச் சீட்டனுப்பினாற் போதியதாய் இருந்தது. இப்படி உலகத்திலே நடந்த தந்திரங்கள் மிகுதி. இவைகள் எல்லாத்தையும் அந்தந்தக்காலத்திலிருந்த பெரியோர்கள் நன்றாய்ப் பரிசோதித்தறிந்து தள்ளியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தந்திரிகளிடத்திற்போய்ச் சுகமுண்டாகுதென்று சொல்லுகிறவர்கள் அறிவில்லாத பேதை மனிதர் அவர்களிற் சுகமாகிறவர்கள் உண்டானால அவர்கள் மிகவுங் கொஞ்சப்பேர். அவர்களுக்கும் மன நம்பிக்கையினாலும், விருப்பத்தினாலுஞ் சுகமாகிறதேயன்றி அந்தத் தந்திரிகளிடத்திலுள்ள யாதொரு தத்துவத்தினாலல்ல.

தமி. நல்லது நான் சொல்லிவந்த எந்தக்காரியத்தையும் நீ அதட்டி அதட்டி அததற்கெல்லாம் நல்ல நல்ல அழிகட்டான நியாயங்களைச் சொல்லி என் மனதிலும், இதெல்லாம் தந்திரமென்னப்படப்பண்ணினாய். ஆனாலும் உன்னை ஒரு கேள்வியோடே மடக்கி உன்பாதிரிமார் போதிக்கிற வேதமெல்லாம் பறந்தோடப்பண்ணுகிறேன்பார். அந்தக் கேள்வி என்னவானால். நீ சொல்லிவந்த கதைகளெல்லாத்திலுஞ் சுகங்கொடுத்தவர்கள் தந்திரிகளென்றும், அவர்களிடத்திற் சுகமடைந்தவர்கள் தங்களுடைய மனநினைப்பினாலே அப்படிப் பாவித்துச் சுகமடைந்தார்களென்றுஞ் சொன்னாயே? அப்படியானால் உங்கள் கிறிஸ்துநாதர் வெகுவெகு அற்புதங்களைச் செய்தாரென்றும், அந்த அற்புதங்கள்தான் உங்கள் கிறிஸ்துமார்க்கத்துக்கு அத்தாட்சிகளென்றுஞ் சொல்லுகிறீர்களே? பின்னை அவரிடத்திற் சுகமானவர்களுந் தங்கள் மன நினைப்பினாலே சுகமானார்களென்று சொன்னாலென்ன? தம்பியர் அகப்பட்டுக்கொண்டாரே, மறுமொழிசொல்ல இயாதொரு வழிவகையுந்தெரியாமல் முழிசுகிறான் பையன்.

மா. நம்முடைய கேள்விகளைப்பார்க்கிறபொழுது நாம் மகாமூடி என்று காணுகிறேன். நாம் கேட்டகேள்வி நல்ல கேள்விதான். கிறிஸ்துநாதர்செய்த அற்புதத்திலே பெரிய வித்தியாசமுண்டு. அவர் செத்த நாறற்பிணங்களைப் பிழைப்பித்திருக்கிறார். செத்தவர்களுக்கு மனநினைப்பெங்காலே, ஆகையினாலே அப்படிப்பட்ட ஒரு அற்புதத்தை ஒருவன் செய்வானேயாகில அவன் உண்மையுள்ளவன் என்றும், தேவனால வந்தவனென்றும்நம்பலாம் மற்றுங்காரியங்களெல்லாம் பொய்யும் புரளியுந் தந்திரமுமல்லாமல் வேறொன்றல்ல.

தமி. தம்பி நீசொன்ன காரியங்களெல்லாம் நிசமாய்த்தான் காணுது. நான் வேதாரணியத்துக்குப்போய் வீணிலே உலையாதபடிக்கு இடைவழியிலே உன்னைக்கண்டுகொண்டது மெத்த நயமாச்சுது. என்னுடைய இனத்தவர்களிலுஞ் சிலர் வேதாரணியத்துக்குப் போக இருக்கிறார்கள். அவர்களுக்கும் நான் இதுகாரியங்களைச் சொல்லிமறித்துப்போடவேணும். பின்னை நான்போய்வருகிறேன்.

மா. நல்லது பின்னை நாம்போய்வாறதுதானே.

STATISTICS OF THE COLLECTORATE OF MADURA.

[Continued from page 97.]

சிவகங்கை சப்த்தி செமிந்தாரி.

சிவகங்கை முன் இராமநாதபுரஞ் செமிந்தாரியுடன் சேர்ந்திருந்தும், இப்பொழுது இச்செமிந்தாரியைத் தென்பிரிவின் அப்பல் பிரவிஞ்சியால் கோட்டார் கொஞ்ச நாளைக்கு முன் இறந்துபோன பெரிய உடையார்த்தேவராகிய போதகுருசுவாமி இராசா பக்கமாக விட்டிருக்க அதைச் சதர் அதாலத்துக் கோட்டார் மறுவிசாரணை செய்து போதகுரு மகாராசாவுக்கு முன் இறந்துபோன செமீந்தாரின் பெண்சாதியாகிய அங்கமுத்து நாச்சியார்பக்கந் தீர்ப்பாக்கியிருந்தும், பின்னும் இராசாவின் பக்கத்தார் இராசாத்தியினிடத்தில் அப்பல் கேட்டிருப்பதால் தீர்ப்பு முடிகிற வரைக்குஞ் சதர் அதாலத்துக் கோட்டாருடைய உத்தரவின்படி சிவகங்கை செமிந்தாரி கோவறன்மேந்தாரின் விசாரணைக்குக் கீழாக இருக்கின்றது.

இதிலும் இராமநாதபுரஞ்சீமைச் செமிந்தாரியைப்போலத் திறையானது தானியங்களாக வாங்கப்படுகின்றது, மதுரைக் கலக்கட்டருடைய அதிகாரத்துக்குக் கீழான பிறகு அவர் இச்செமிந்தாரியில இருந்த பதினாலு தாலுகாவையும், எட்டுத் தாலுகாவாகச் செய்துபோட்டார்

அமீனு, முகசமதார்களுடைய நாமங்கள்.

க. திருப்புவனம்;	அமீனு.	சீனிவாசகராவு.
" "	முகசமதார்.	ரெங்கராவு.
உ. பார்த்திபநல்லூர்;	அமீனு.	கிருஷ்ணராவு.
" "	முகசமதார்.	இராமச்சந்திரராவு.
௩. காளூர்;	அமீனு.	காசிமலவிசாப்பு.
" "	முகசமதார்.	கிருஷ்ணராவு.
௪. திருவேகம்பத்தூர்;	அமீனு.	நரசிங்கராவு.

Digitized by Google

" "	முசுமதார்.	கிருஷ்ணசுவாமிராவு.
௫. திருப்பத்தூர்;	அமீனு.	இராமசந்திரராவு
" "	முசுமதார்.	ரெட்டிராவு.
௬. இயமனேசபுரம்,	அமீனு.	மகம்மதுபாக்கர்சாய்பு.
" "	முசுமதார்.	சாமராவு
௭. ஆரூர்வட்டகை,	அமீனு	தேவராசஅய்யன்.
" "	முசுமதார்.	இலட்சுமணராவு.
௮. சாக்கை;	அமீனு	கிருஷ்ணராவு.
" "	முசுமதார்.	இராமராவு.

மேற்சொல்லிய நான்கு செமிந்தாரிகளில் இராமநாதபுரம், சிவகங்கை என்னும் இரண்டு பெரிய செமிந்தாரிகளைப்பற்றிக் காட்டியும் கண்டமநாயக்கனூர், அம்மையநாயக்கனூர், என்னும் மற்ற இரண்டு செமிந்தாரிகளும் விஸ்தாரமானவைகளாயிருந்தும், மற்றுஞ் செமிந்தாரிகளைப்போலத் தாலூகாவாகப் பிரிக்கப்படாதபடியால், அவைகளைச் சேர்ந்த கோவறமெண்டுத் தாலூகாத் தாசில்தார்களாற் போலீசு விசாரணைகள் நடத்தப்பட்டுவருகின்றன. அவைகளைப்பற்றி அதிகமாய் விபரிக்கத் தேவையில்லை.

உப்பளமுந் தஞ்சாவூர் துவங்கித் திருநெல்வேலி நாடுமட்டுக்குஞ் சமுத்திரக் கரையோரங்களிலிருக்கிற கிராமங்களின் போலீசு விசாரணையும் மிகுந்த கிரகஸ்தனும் கோவறமெண்டின் உத்தம உழைப்பாளியுமாகிய நரசிங்கராயரின் விசாரணைக்குக் கீழாகவிருக்கின்றது.

மதுரையிலுஞ் சிவகங்கையிலுமுள்ள தேவஸ்தானங்களின் பிரயாசமுள்ள அலுவல்கள் அதிக நேர்மையும், புத்தியுஞ், சாக்கிரதையுமுள்ள சீனிவாசகராவின் விசாரணைக்குக் கீழாகவிருந்தன. ஆகிலுஞ் சென்றுபோன சித்திரை மீ. அவர் மரணித்துப்போகச் சிவகெங்கையில் ஓர்குறிச்சிக்கு அமீனுவாயிருந்த கிஷ்ட்டணராவு மேற்சொல்லிய அலுவல்களைப் பார்த்துவருகிறார்.

STATISTICS OF THE COLLECTORATE OF MADURA.

Shevagunga Deputy Zemindary.

Shevagunga, once formed a portion of Ramnad, and it is at present under the care of the Government, by order of the Sudar-Udalut pending the decision in appeal of Her Majesty in Council, given by the Provincial Court of appeal, Southern Division, in favor of Rajah Pothagoorooswamy Peria Odia Thavur (very recently deceased) and revised by the Sudar Udalut in favour of the Ranee Angoomootoo natchiyar, one of the widows of the last Zemindar but one. Here, as in Ramnad, the tax is received in kind, but soon after coming into the Collector's management, he reduced the number of talooks from 14 to 8

The names of Ameens and Moosoomdars in Shevagunga are,

1.	Tiroopoovanum	Ameen	Seenivasa Rao.
	" "	Moosoomdar	Renga Rao
2.	Partipanellore;	Ameen	Krishnu Rao
	" "	Moosoomdar	Ramachandra Rao.
3	Canoor;	Ameen	Cassim Ali saib.
	" "	Moosoomdar	Krishnu Rao.
4	Tirovagumputtoor;	Ameen	Narasinga Rao.
	" "	Moosoomdar	Kristnaswamy Rao.
5	Tirooputtoor;	Ameen	Ramachandra Rao.
	" "	Moosoomdar	Retty Rao.
6.	Yamanasapooram;	Ameen	Mahommed Bhakur Saib.
	" "	Moosoomdar	Shama Rao
7.	Auroor Vattagay;	Ameen	Dava Rajah Iyen
	" "	Moosoomdar	Lucshumun Rao.
8.	Sakai	Ameen	Krishnu Rao.
	" "	Moosoomdar	Ram Rao

It is only by reason of their great superficial extent, that mention has been made of the Zemindaries of Guntamanaikanoor and Ammianaikanoor; but as they are not subdivided into talooks, but form portions of the Government talooks, by whose Tasildars the Police is administered; further detail of this interior economy is here unnecessary.

The salt department, with the police of all the coast villages from the borders of Tinnevelly District to that of Tanjore, under Narasinga Rayar, a man remarkable for his integri and industry for Government offices.

The arduous labors of the Devastanom department, spre ing over the whole of Madura and Shevagunga were lately the hands of the very upright, intelligent, and active Seeniva Rao; but they are now under the management of Krishna R late Ameen of Shevagunga. We hope he will not fail of for ing himself after the character of his predecessor.

[Communicated for the Morning Star.]

